1979 மார்ச் 9]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அந்த ஏரி பொதுப்பணித் துறைக்குச் சொந்தமானது. பட்டா கொடுக்கிற உத்தேசமில்லை.

பொன்னமராவதி நகருக்குக் குடிதண்ணீர் வழங்கல்.

*வினா எண். 308 —திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி நகரில் குடி தண்ணீர் தட்டுப்பாடு கடுமையாக உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) ஆம்.

(ஆ) பொன்னமராவதி பேரூராட்சி குடிநீர் திட்டத்தின் ஆய்வுப்பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆய்வுப்பணிகள் முடிந்தபின் திட்ட உத்தேச மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு அதற்கு அரசின் ஒப்புதல் பெற்று, குடிநீர்திட்ட வேலைகள் ஆரம்பிக்கப் படும்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, இந்த ஆய்வானது கிட்டத்தட்ட பத்தாண்டுக் காலமாக தொடர்ந்து நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது. எப்போது முடியும் என்று தெரியவில்லை. ஆகவே பொன்னமராவதி போன்ற பெரிய நகரங்களை—பேரூராட்சி மன்றங்களிலே குடிநீர் இல்லாத காரணத்தால் பொதுமக்கள் 4, 5 மைல்கள் நடந்து செல்லவேண்டிய அவலநிலைக்கு ஆளாக்கப்படுகிற நிலைமை இருக்கிறது, இதைக் கருத்திலே கொண்டு உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஏற்பாடு செய்யப்படுமா? அமைச்சர் அவர்களே அங்கே நேரடியாக வந்து பார்வையிடலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, 1971-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் ரூ. 22 இலட்ச மதிப்பீட்டிலே பொன்னமராவதி பேரூராட்சி குடிநீர் திட்ட ஆய்வுப் பணிகளை ஏற்றுக்கொள்வதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. பொன்னமராவதி பஞ்சாயத்து ஆய்வு மதிப்பீட்டிற்காக 5,500 ரூபாய் 1971-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 17-தேதியில் செலுத்தியுள்ளது. மீதித்தொகை இன்னும் செலுத்த

படவில்லை. ஆய்வு வேலை ஆரம்பிக்கப்பட்டு நடந்து கொண்டிருக்கிறது. திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்காக வாரியத்தால் அனுப்பி வைக்கப்படும். பிறகு குடிநீர்த் திட்டப்பணி ஆரம்பிக்கப்படும். சட்ட மன்றத் தொடர் கூட்டம் முடிந்த பிறகு, நான் ஒவ்வொரு தொகுதிக்கும் போவதைப்போல மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதிக்கும் வருகிறேன். அவர்கள் அன்று பூராவும் இருந்து குறைகளைச் சொல்லலாம், அவைகளுக்கு இந்த அரசால் ஆனதைச் செய்கிறேன்.

சென்னையில் குடிசை மாற்றுவாரியக் குடியிருப்புகளில் தண்ணீர், விளக்கு வசதிகள்.

*வினா எண் 309 — திரு. டி. கே. கபாலி : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குடிசை மாற்றுவாரியம் கட்டிய பகுதிகளில் கக்கூஸ், விளக்குகள், தண்ணீர்க் குழாய்கள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதற்கான நடவடிக்கை உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) & (ஆ) குடிசைப்பகுதி மாற்றுவாரியம் கட்டிய சில பகுதிகளில் மட்டுமே கழிப்பிடங்கள், விளக்குகள், குழாய்கள் ஆகியவை இன்னமும் முழு அளவில் அமைத்துக் கொடுக்கப்படவில்லை. இத்தகைய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் மாநகராட்சிக்கு முன்பணம் (Advance) ஏற்கனவே செலுத்தப்பட்டிருக்கிறது. இப்பணிகளை விரைந்து செயல்படுத்துமாறு வாரியம் மாநகராட்சி அதிகாரிகளைக் கோரியுள்ளது. ஏனைய பகுதிகளில் மேற்கூறிய வசதிகள் முழு அளவில் செய்யப்பட்டுள்ளன அல்லது அதற்கான பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

திரு. தீ. சு. நல்லதம்பி : தலைவரவர்களே, நமது அமைச்சரவர்கள் சில பகுதிகளுக்கு இப்பொழுது முயற்சியெடுத்து வருகிறோம் என்றும், சில பகுதிகளுக்கு மாநகராட்சியினிடத்திலே நாங்கள் பணத்தைக் கட்டியிருக்கிறோம், அவர்கள் இன்னும் முடித்துத் தரவில்லை என்றும் சொன்னார்கள். இன்றையதினம் குடிநீர் வடிகால் வாரியம் என்று பிரிக்கப்பட்ட பிறகு ஏன் மாநகராட்சியை நீங்கள் எதிர்பார்த்திருக்க வேண்டும்? அந்த வடிகால் வாரியம் என்னதான் செய்கிறது என்பதை நமது அமைச்சரவர்கள் அருள்கூர்ந்து விளக்குவார்களா என்று கேட்கிறேன்.